முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 16.10.2025.

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>

<u>அசல் வழக்கு எண். 68/2024</u>

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கன்னியப்பன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | பெருமாள் | வயது | : | 65 |
| ஊர் | : | சிறுவேலியநல்லூர் | தொழில் | : | விவசாயம் |

<u>வா.சா. 1 (கன்னியப்பன்): வாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணை:</u>

1. பிரதிவாதிகள் சேட்டு மற்றும் கண்ணன் எனக்கு என்ன முறை என்றால் சித்தப்பா உறவு முறை ஆவார்கள். வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்தா அல்லது என் அம்மாவால் கிரையம் பெறப்பட்ட சொத்தா என்றால் என் அப்பா பெற்ற சொத்தாகும். நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கு சொத்துக்கள் எவ்வளவு அளவு இருக்கும் என்றால் 1 ஏக்கருக்கு கம்மியாக இருக்கும். தாவா 1ம் அயிட்ட சொத்தானது புல எண் 376/2பி கண்ட சொத்தானது வா.சா.ஆ.1ல் 4வது பக்கத்தில் புறம்போக்கு நிலத்திற்கு மேற்கு என்று குறிப்பிட்டு அந்த புறம்போக்கு நிலம்தான் வழி என்பதை மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் புறம்போக்கு நிலம் உள்ளது ஆனால் என் சொத்திற்கு செல்ல வழியை மறுப்பதால்தான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன். அவர்கள் வழி எதுவும் தடை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய அப்பா மற்றும் சித்தப்பா இருவராலும் பொது வழி என்று குறிப்பிட்டு ஆவணம் ஏதேனும் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. வாசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள என்னுடைய தாயாரால் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்திலும் பொது வழி என்று குறிப்பிட்டுள்ளதால் இல்லை.

2. எனக்கு உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் 3வர் ஆவோம். என் அம்மாவால் எழுதப்பட்ட தானசெட்டில்மெண்ட் அனைவருக்கும் எழுதப்பட்டதா என்றால் இல்லை. செல்லனுக்கு மட்டும் எழுதப்படவில்லை. எனக்கும் ஆறுமுகத்திற்கும் எழுதப்பட்டுள்ளது. ஆறுமுகத்திற்கு அவர் பயிர் வைப்பதில் பிரதிவாதிகளால் பிரச்சனை எதுவும் செய்யவில்லையா என்றால் ஆறுமுகத்திற்கும் பிரதிவாதிகள் பிரச்சனை செய்கிறார்கள்.

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2025.10.16 18:33:57 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு